# 6

# கிறிஸ்து: துக்கம் நிறைந்தவர்

*“அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்”:* ஏசாயா 53:3 ஒரு மேசியாத்துவ வசனப்பகுதி என்பதில் சந்தேகமில்லை. அது மேசியாவாகிய, கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணப்பட்ட அவரைப் பற்றிப் பேசப்படுகிறது என்று அறிவோம். எத்தியோப்பிய மந்திரி இந்த வசனப்பகுதியை வாசித்துக் கொண்டிருந்தபோதுதான் பிலிப்பு அவனுடைய இரதத்துடன் சேர்ந்துகொண்டான்; இங்குதான் பிலிப்பு அவனுக்கு “இயேசுவைக் குறித்து பிரசங்கித்தான்” என்று சொல்லப்படுகிறது (நடபடிகள் 8:35).

மேசியா “துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாயிருந்தார்.” நீங்கள் உங்கள் வாழ்க்கையில் துக்கம் நிறைந்தும் பாடுகள் நிறைந்த உணர்வைப் பெற்றிருக்கிறீர்களா? அப்படியிருக்குமேயானால், இரட்சகராகிய, இயேசு - தீர்க்கதரிசியாக; ஆசாரியராக, ராஜாவாக இருக்கிற தேவனுடைய குமாரனும் - துக்கம் நிறைந்த வாழ்க்கையையே வாழ்ந்தார் என்பதையறிந்து நீங்கள் ஆறுதலடையலாம். “இயேசுவானவர் துக்கம் நிறைந்தவராயிருந்தார்” என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், ஏமாற்றங்களையும் சந்தோஷமற்ற நேரங்களையும் அனுபவிக்காமல் வாழ முடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

## வியப்பிற்குரிய அவருடைய துக்கங்கள்

இயேசு கிறிஸ்து எப்படி “துக்கம் நிறைந்தவராயிருந்தார்” என்பதை பார்ப்பதற்கு முன் அந்தக் கருத்து வியப்பிற்குரியது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரும், மேசியாவுமாகிய அவர், துக்கமும் பாடுகளும் நிறைந்த வாழ்க்கையை ஏன் அவர் வாழ வேண்டும்?

இப்படிப்பட்டக் கருத்து யூதர்களுக்கு புதுமையாக தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் வெற்றி சிறக்கும் மேசியாவை, யுத்த வீரராகிய மேசியா வந்து தம்முடைய சத்துருக்களை பாதத்தின் கீழ் மிதித்து, இஸ்ரவேலரை தாவீதின் மகிமையான இராஜ்யத்துக்காக மீட்பர் என்று எதிர்பார்த்தனர். அப்படிப்பட்ட மேசியா தமது வெற்றிக்களிப்பிலே மிதக்கவும் ஜெயத்திலே களிகூரவும் வேண்டியவர். அவருடைய வாழ்க்கையில் துக்கத்திற்கும் பாடுகளுக்கும் இடமிருக்காது.

இந்தக் கருத்து இன்றைய ஜனங்களுக்கும் புதுமையாகவே தெரிகிறது. “துக்கம் நிறைந்த ஒரு மனுஷனை” யாராயிருந்தாலும் ஏன் பின்பற்றிப் போக விரும்ப வேண்டும்? இயேசு அடிக்கடி துக்கங்களைச் சுமந்தார்; வாழ்க்கையின் முடிவில், அவர் சிலுவையில் அறையப்பட்டார். ஐசுவரியமும் புகழுமுள்ளவர்களுக்கு சாதகமாக அவருக்கு இது தோல்விதான். (அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும்

*வரை இது உண்மை - ஆனால் ஐசுவரியமும் புகழுமடைந்திருந்தவர்கள் பெரும்பகுதியினர், அவருடைய உயிர்த்தெழுதலை ஏற்றுக்கொள்ளவில்லை.) தோல்வியடைபவரைக் கண்டு யார் வியப்படைவார்கள்? யார் இழந்து கொண்டிருப்பவரை பின்பற்றுவார்கள்? துக்கம் நிறைந்த வாழ்க்கையை உடைய ஒருவரைப் பார்த்து நாம் சகித்து கொள்ளலாம் அல்லது பரிதாபப் படலாம், ஆனால் அவரைக் குறித்து வியப்படையவோ பின்பற்றிப் போகவோ விரும்ப மாட்டோம்.*

G. C. *ப்ரூயர் கீழ்வரும் வார்த்தைகளினால் இதை வெளிப்படுத்தினார்:*

> *''துக்கம் நிறைந்தவர் ... உலகத்திற்கு சிறந்த கொள்கையுடையவரா(யிருக்கிறாரா)? கூச்ச சுபாவமும், துக்கம் நிறைந்தும், அழுதுகொண்டுமிருக்கிற ஒரு மனுஷனின் பாதத்திலே மனுஷர்கள் விழுவார்களா? அது மனிதருடைய இயல்பு அல்ல; நமது உயர்ந்த சிறப்புக் கொள்கைக்கு உகந்த மனுஷன் பலமுள்ளவனாக, பயம் அற்றவனாக, வெற்றி வீரனாக, இரும்பு மனிதனாக இருக்க வேண்டும் என்றே எதிர்பார்ப்போம். நாம் வீர வணக்கம் செய்பவர்களாயிற்றே ... ."*
>
> *... பலசாலியும் தைரியமுமுள்ள மனுஷர்களின் செயல்களைக் கண்டு மனதைப்பறி கொடுக்கிறோம். மனம் கொள்ளை கொண்டுபோகப் படுகிறது; பயந்த சுபாவமுடைய மனுஷன் ஒன்றும் பிரயோஜன மற்றவனேயொழிய வேறெதுவுமில்லை ... .*
>
> *உலகம் வீரசாகஸக் கதைகளை கேட்பதிலே விருப்பமுடையவர்களாயிருக்கின்றனர் ... . அதே போல வினயமானவைகள், மத அல்லது மார்க்கக் காரியங்கள், பரிதாபப்பட்ட வேண்டிய காரியங்களைவிட மேலோட்டமான, அதே நேரத்தில் உற்சாகம் நிறைந்த வேடிக்கை விளையாட்டுகளில் இந்த உலகம் அதிக நாட்டம் செலுத்துகின்றனர். மனுஷர்கள் இசை முழக்கங்களையும் நகைப்பையும் விரும்புவது போல ஆற்றவொண்ணா அழுகைகளையோ வேதனைகளையோ விரும்புவதில்லை.*[1]

*எவ்வளவு ஆச்சரியமான விஷயமாகக் காணப்பட்டாலும், இயேசு "துக்கம் நிறைந்தவர்'' மற்றும் அதே வேளையில் மேசியாவாகவும், ராஜாவாகவும் இருக்கிறார், அவரையே எல்லா மனுஷரும் தொழுது சேவிக்க வேண்டும்!*

## அவருடைய துக்க நேரம்

இயேசு ஏன் "துக்கம் நிறைந்தவராயிருந்தார்"? அவர் பாடு அனுபவிக்கக் காரணமாயிருந்தது என்ன?

*முதலாவதாக, பாதுகாப்பான யூகத்தின் அடிப்படையில் சொன்னால், ஒரு மனுஷனாக, எல்லா ஜனங்களும் அனுபவிக்கிற துக்கங்களைப் போலவே அவரும் அனுபவித்தார்.* அநேகமாக, நாசரேத்து ஊரிலே அவர் வளரும்போது, வாலிப பிள்ளைகளுக்கே உரிய அநேக ஏமாற்றங்களை அவர் அறிவார். அவருடைய குடும்ப உறுப்பினர்களிலோ அல்லது அண்டை வீட்டாரிலோ, அல்லது நண்பர்களிலோ யாராவது மரித்து, மரணத்தின் வேதனைகளை அந்தக் குடும்பத்தாரோடே சேர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை

அவருக்கு இருந்திருக்கலாம். அவருடைய வாழ்க்கையும் மற்ற எல்லாருடைய வாழ்க்கையைப் போலவே இருந்த படியால் - அவர் பாவம் எதுவும் செய்யவில்லை என்பது தவிர - எங்குமுள்ள அனைத்து மக்களுக்கும் வருகிற பொதுவான வலிகளுக்கும் நஷ்டங்களுக்கும் அவர் விதிவிலக்காயிருக்கவில்லை.

இரண்டாவதாக, இயேசு அநேக துக்கங்களை அனுபவித்த தருணங்களையும், கண்ணீர் விடுமளவு நெகிழ்ச்சியடைந்த சம்பவங்களையும் சுவிசேஷங்கள் விவரிக்கின்றன. ஒவ்வொரு நிகழ்விலும், அவருடைய துக்கத்திற்கான காரணம் குறிப்பிடத்தக்கது.

1. தம்மைப் புறக்கணித்த எருசலேமின்மீது அவர் தமது துக்கத்தை வெளிப்படுத்தினார். மத்தேயு 23:37-39ல், எருசலேம் குறித்துப் புலம்புகிற இயேசுவின் வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> எருசலேமே, எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமல் போயிற்று. இதோ உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கி விடப்படும். கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும். இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

இயேசு இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, அவருடைய குரலிலே வலியும் கண்களிலே கண்ணீரும் இருந்தது. ஏன்? அவர் எருசலேம் மக்களை அதிகமாக நேசித்தார், அவர்களை இரட்சிக்க விரும்பினார், அவர்கள் இரட்சிக்கப்படுவதை புறந்தள்ளியதால் துக்கத்தால் நிறைந்தவரானார்.

மனித வர்க்கத்தின் மீது இயேசு கொண்டிருந்த அன்பு எவ்வளவு பெரியது! எருசலேமில் இருந்தவர்கள் இயேசுவுக்கு செய்தது மிகவும் கொஞ்சம்; பொதுவாகவே, அதின் குடிகள் அவரை புறக்கணித்தார்கள், அவர்கள் விரைவில் தம்மை சிலுவையிலறைவார்கள் என்று இயேசுவுக்குத் தெரியும். இருப்பினும், இயேசு அவர்களிடத்தில் அன்பு வைத்து அவர்களை இரட்சிக்க விரும்பினார். அவர்களை இரட்சிக்காதபடிக்கு அவரைத் தடுத்த ஒரே காரியம் அவர்கள் அவருடைய ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொள்ள மனதில்லாமலிருந்ததுதான். தம்மிடத்தில் வரமறுத்த பாவிகளின் நிமித்தம் இயேசு கண்ணீர் விட்டார்.

2. இயேசு லாசருவின் மரணத்தின்போது தம்முடைய துக்கத்தை வெளிப்படுத்தினார். லாசருவின் மரணத்தைப் பற்றி யோவான் 11ல் சொல்லப்படுகிறது. லாசருவும் அவனுடைய இரண்டு சகோதரிகளாகிய மரியாளும் மார்த்தாளும், பெத்தானியாவில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இயேசுவுக்கு சிறந்த சிநேகிதராயிருந்தார்கள் (யோவான் 11:5). லாசரு வியாதி பட்டபோது இரண்டு சகோதரிகளும் அவனது வியாதியைக் குறித்து சொல்லியனுப்பினார்கள், கர்த்தர் உடனடியாக வந்து அவனைக் குணமாக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். மாறாக, இயேசு இரண்டு நாட்கள் தாமதமாக்கி பெத்தானியாவுக்கு போகாமல் தாம் இருந்த ஊரிலேயே இருந்து விட்டார். அவர் பெத்தானியாவுக்கு வந்தபோது, லாசரு மரித்து நான்கு நாட்களானதாகக்

கண்டார் (யோவான் 11:17). மார்த்தாள் மரியாள் இருவருமே இயேசுவைக் கண்ட போது, "நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான்" என்று சொன்னார்கள் (யோவான் 11:21, 32). பிறகு அந்த வசனப்பகுதி சொல்லுகிறது,

> அவள் [மரியாள்] அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து: "அவனை எங்கே வைத்தீர்கள்" என்றார். "ஆண்டவரே, வந்துபாரும்" என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார். அப்பொழுது யூதர்கள், "இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்!" என்றார்கள் (யோவான் 11:33-36).

"இயேசு கண்ணீர் விட்டார்" (யோவான் 11:35): வேதத்திலேயே மிகவும் சிறிய வசனம் இது, ஆனால் அதன் உட்பொருள் மிகப்பெரியது. இயேசு ஏன் கண்ணீர் விட்டார்? யூதர்கள் நினைத்தார்கள் அவர் லாசருவினிடத்தில் மிகுந்த அன்பு வைத்ததினால் அழுகிறார், அது ஒரு வகையில் உண்மையாக இருக்கலாம். ஆயினும், விரைவில் லாசருவை மரித்தோரிலிருந்து தாம் எழுப்பப் போகிறார் என்று தெரிந்திருந்ததால் (யோவான் 11:11), லாசருவின் மரணம் அவரை அழவைக்கவில்லை. மாறாக, மற்றவர்கள் அழுது கொண்டிருப்பதை கவனித்திருந்த இயேசு அவர்கள் மீது இரக்கப்பட்டு கண்ணீர் விட்டார். அவர்களோடு சேர்ந்து அவர் துக்கத்தை உணர்ந்தார். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் மீது கொண்டிருந்த *பரிவினிமித்தம்*: அவர்களைப்போல இயேசு மனதில் உணர்ந்து பார்த்தார். ஆகையால், அவர் அழுதார்.

3. நெருங்கி வந்த தமது மரணத்தினிமித்தம் இயேசு கண்ணீர் விட்டார். தமது மரணம் நெருங்கி வந்தபோது, தமது ஆத்துமாவில் கலங்கினார் என்று சுவிசேஷங்கள் தெளிவாக்குகின்றன. யோவான் 12:27, 28ல், நாம் வாசிக்கிறோம்,

> "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். 'பிதாவே இந்த வேளையினின்று என்னை இரட்சியும்' என்று சொல்லுவேனோ; ஆகிலும் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றார். அப்பொழுது: "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப் படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

யோவான் 13:21ன் படி, இயேசு "ஆவியிலே கலங்கி: 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்' " என்றார்.

இயேசுவை நெருங்கிக் கொண்டிருந்த மரணம் அவருக்கு கலக்கத்தைக் கொடுத்தது - தாம் படப்போகும் பாடுகளினாலே மட்டுமல்ல, அதற்குட்பட்டுள்ள ஏமாற்றமளிக்கும் செயல்களும் கூடத்தான். அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தமது ராஜ்யத்தைக் குறித்து யூதர்களுக்கு அறிவித்த பிறகும் அவர்கள் அவரை புறக்கணித்து விட்டனர் என்பதும், மேலும் தமது சீஷர்களுக்கு மூன்று வருடம் தொடர்ந்து போதித்தும் நட்புறவு கொண்டு பழகி வந்தும் அவர்கள் அவரைக் காட்டிக் கொடுப்பார்கள், மறுதலிப்பார்கள், கைவிடுவார்கள் என்பதும் பற்றிய

*அவரது முன்னறிவு அவரை மிகவும் வருத்தமடையச் செய்திருக்க வேண்டும். எனவே அவர் கலங்கியதில் ஆச்சரியமில்லை!*

*உண்மையில், அவர் "துக்கம் நிறைந்தவராயிருந்தார்" என்பது குறித்த ஒரு முழுக்காட்சிதான் கெத்செமனே தோட்டத்து நிகழ்ச்சி. மாற்குப் புத்தகம் அந்தக் காட்சியை கீழ்வருமாறு விவரிக்கிறது:*

> *பின்பு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: "நான் ஜெபம் பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள்" என்று சொல்லி, பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் தம்மோடே கூட்டிக் கொண்டு போய், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது அவர்: "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள்" என்று சொல்லி, சற்று அப்புறம் போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக் கூடுமானால் அது நீங்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு: "அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்தி லிருந்து எடுத்துப் போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றார் (மாற்கு 14:32-36).*

*இந்தத் தருணத்தில் இயேசு "துக்கம் நிறைந்தவராயிருந்தார்" என்பது, தெளிவாகக் கூறப்படுகிறது. அவர் கண்ணீர் சிந்தினாரா? எபிரெயர் புத்தக எழுத்தாளர் அவர் அப்படிச் செய்ததாகக் குறிப்பிடுகிறார்: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி" (எபிரெயர் 5:7அ).*

*கெத்செமனேயில் இயேசுவுக்கு உண்டான துக்கம் வரவிருந்த கடுமையான சம்பவத்தை முன் காட்டியது. ஜனங்கள் மரணத்தில் சந்திக்கும் துக்கத்தை அவர் அப்பொழுதே உணர்ந்தார். ஏற்கனவே சிலுவையிலறையப் பட்டவர்களின் கடும் வேதனையை கொடுக்கும் மரணத்தை அவர் சிலுவையிலே, பகிர்ந்து கொண்டார். எப்படியிருப்பினும் அதற்கும் அப்பால், மனுஷருடைய பாவங்களை அவர் சுமந்தார். பாவமறியாத அவர் நமக்காக பாவமானார்; நமது பாவங்களுக்காக அவர் வாதிக்கப்பட்டார் (காண்க 2 கொரிந்தியர் 5:19-21). அந்த உண்மை அவர் அனுபவித்ததைக் காட்டிலும் சிலுவைப்பாடுகளை அனுபவித்த மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் கொடிதாயிருந்தது.*

## குறிப்பிடத்தக்க அவரது துக்கங்கள்

*இயேசுவின் துக்கங்கள் நமக்கு இந்த ஜீவியத்தில் என்ன பொருளைக் கொடுக்கிறது? அவரைப் பின்பற்றிப்போகிற நாம் அவருடைய மதிப்புகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும்; அவருக்கு இழைக்கப்பட்ட அனைத்து துக்கங்களிலும் நாமும் வருத்தப்பட வேண்டும்.*

*1. இயேசுவின் எருசலேமைக் குறித்தத் துக்கம் பாவத்தின் வினயத்தை விளங்கப் பண்ணுவதும், அதிலிருந்து நம்மை மீட்க இயேசுவின் விருப்பத்தையும் சுட்டிக்காட்டுகிறது. மத்தேயு 23:37லும் லூக்கா 13:34லும் உள்ள அவருடைய வார்த்தைகளில் வேதனை மற்றும் பாவத்தைக் குறித்து*

இரண்டு உண்மைகள் சொல்லப்படுகிறது. முதலாவதாக, *பாவிகள் (தங்கள் ஆத்துமாக்களை) இழந்து போனவர்களாய் காணப்படக் காரணம் அவர்களை இரட்சிக்கிற திராணியுள்ள ஒரே ஒருவரை அவர்கள் புறந்தள்ளுவதை தெரிந்து கொள்வது தான்.* எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்: விரும்புகிற "எவனும்" அவருடைய சீஷனாகலாம் (மத்தேயு 16:24): அவரிடத்தில் "விசுவாசிக்கிறவன் எவனோ மனதுள்ளவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (யோவான் 3:16). "எல்லாரும்" மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (2 பேதுரு 3:9). எல்லாரும் இரட்சிக்கப்படாமலிருப்பதற்கான ஒரே காரணம் சிலர் கிறிஸ்து மூலமாய் அளிக்கப்படும் இரட்சிப்பை புறந்தள்ளுவது தான்! அவர் தமது விரோதிகளையும் இரட்சிக்க வந்தார், ஆனால் அவர்கள் "வரப்போவதில்லை." அதேபோல இன்றைக்குச் சிலர் இயேசுவினிடமாய் இழுப்புண்டு இரட்சிக்கப்பட மனதில்லாதிருக்கிறார்கள். இரண்டாவதாக, *கிறிஸ்துவைப் புறக் கணித்தல் துக்கத்துக்கான காரணி.* ஜனங்கள் மனந்திரும்ப மறுத்து அவரிடத்தில் வர விரும்பாத போது நாம் இயேசுவின் வேதனையை பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். பாவிகளை நேசித்து இயேசு கொண்டிருந்த அதே அன்பை நாமும் காட்ட வேண்டும். காணாமல் போன ஆடு, காணாமல் போன வெள்ளிக்காசு, கெட்ட குமாரன் ஆகிய உவமைகளில் இந்த ஒரு பாடம்தான் போதிக்கப்படுகிறது (லூக்கா 15). இயேசுவைப் போல நாம் பாவிகளிடத்தில் அன்புகூரும்பொழுது, இரட்சிப்பின் அழைப்பை அவர்கள் புறக்கணிக்கும்போது அவரைப் போலவே நாமும் அழுவோம்.

2. லாசருவின் கல்லறையில் இயேசுவின் துக்கம் *நாம் அழும்போது இயேசுவும் நம்மோடே இரக்கத்தைக் காட்டுகிறார்* என்பது காணப்படுகிறது. லாசருவின் கல்லறையில் மற்றவர்கள் அழுகிறபோது அவர் அழுததுபோல, நாம் வேதனைப்படும்போது நமது துக்கத்தை அவர் உணருகிறார். மற்றவர்கள் துக்கப்படும்போது நாம் அவர் காட்டிய முன்மாதிரியைப் போலவே இரக்கமும் பரிவும் காட்டவேண்டும். "சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்" என்று பவுல் எழுதினார் (ரோமர் 12:15).

3. கெத்செமெனேயில் இயேசுவின் துக்கம் *நமது இரட்சிப்புக்காக பயங்கர கிரயத்தை நமது இரட்சகர் செலுத்தியிருப்பதை* நினைப்பூட்டுகிறது. நாம் அவருடைய வேதனையை புரிந்து கொள்ள முயற்சிக்கிற அதே வேளையில், நமது பாவங்களிலிருந்து விடுதலை செய்யும்படி அப்படியொரு அனுபவத்தை இயேசு கடந்து வந்தார் என்பதற்காக நாம் சந்தோஷப் பட்டு களிகூர வேண்டும். உள்ளே முரண்பாடாய்த் தோன்றும் மெய்கருத்து என்னவெனில், கெத்செமனேயில் துக்கத்தை அவர் அறிந்திருந்தார் என்பதால் சந்தோஷப்பட வேண்டும். நமது இரட்சிப்பின் பாதை அவருடைய கண்ணீரால் பரப்பப்பட்டிருந்தது.

## முடிவுரை

இயேசு மெய்யாகவே "துக்கம் நிறைந்தவராயிருந்தார்." எப்படியிருப்பினும், அவருடைய துக்கங்கள் நிறைந்த அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் மகத்தான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறோம். இயேசு பாவிகளின் இழந்துபோன அவர்களின் நிலைக்காக கண்ணீர் விடும் அளவுக்கு பாவிகளில் அன்புகூர்ந்தார் என்பதால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஒரு சிநேகிதனின்

மரணத்தினிமித்தம் கண்ணீர் விடுமளவுக்கு அவர் மனித பண்பு கொண்டிருந்தார் என்பதும், நம்மோடு கூட துக்கங்களை உணரக் கூடியவராயிருக்கிறார் என்பதையும் அறிந்து நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். விசேஷமாக, இயேசு மனமுவந்து கெத்செமனேயில் வேதனைகளையும் பாடுகளையும் நாம் இரட்சிப்பை அடையும் பொருட்டும் நித்திய ஜீவனை அடையும் பொருட்டாகவும் அனுபவித்தாரே அதினாலே நாம் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம். அவருடைய துக்கத்திலிருந்து நம்முடைய இரட்சிப்பு வந்தது.

இயேசுவின் சோதனைகளும் ஏமாற்றங்களும், அவரது துக்கங்களும் வேதனைகளும், பாடுகள் நிறைந்த சிலுவை மரணமும் முடிவில்லாததும், நித்தியமுமான - ஜீவனில் முடிவுறுகிறது. அவரது மரணத்துக்குப்பின் அவரது உயிர்த்தெழுதல் வந்தது; அவரது உயிர்த்தெழுலுக்குப் பின் அவர் பரமேறுதலும் மகிமையடைதலும் வந்தது. விசுவாசமுள்ள கிறிஸ்தவனுக்கு, கஷ்டப்பட்ட ஒரு வாழ்க்கையும், உபத்திரவங்களும் நித்திய மகிமையினால் முடிசூடப்படும்! அவரது வழிமட்டுமே நம்மை நித்திய ஜீவனுக்கு கொண்டுபோகும் வழி (யோவான் 14:6; 11:25, 26). துக்கப்பட்ட ஒருவருடைய வழியைப் பின்பற்றிப் போவது நமக்கு ஜீவனைக் கொடுக்கும் என்று பொருளானதால், நாம் சந்தோஷமாக பின்பற்றலாம்.

---

குறிப்பு

[1]G. C. Brewer, “Christ, The Man of Sorrows,” *Christ Crucified - A Book of Sermons* (Nashville: B. C. Goodpasture, 1952), 72-73.